**பிப்ரவரி – 15**

# TNPSC துளிகள்

- சினேகா பார்த்திபராஜா என்ற பெண் வழக்கறிஞர் நாட்டில் முதல்முறையாக தான் எந்த சாதியையும் அல்லது மதத்தையும் சாராதவர் என்று அறிவிக்கும் ஒரு அலுவல்பூர்வமான சான்றிதழைப் பெற்றிருக்கின்றார். இவ்வகையில் அவர் நாட்டில் இம்மாதிரியான சான்றிதழைப் பெறும் முதல் நபராகியுள்ளார்.
- ஆசியாவில் மிகப்பெரிய ஒரு வளாகமாக சேலத்தில் ஒரு ஒருங்கிணைப்பு மற்றும் உயர் வடிவமைப்பு கொண்ட பல்நோக்கு கால்நடை மருத்துவமனைப் பூங்காவானது 900 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தப்பட இருக்கின்றது.
- 1993 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் தேதி அன்று ஆரம்பிக்கப்படுவதாக இரண்டாம் போப் ஜான் பாலால் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 13-ம் தேதியன்று ஏற்படுத்தப்பட்ட உலக உடல் வியாதி தினமானது ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் ஒரு விருந்து தினமாகும்.
- ஆப்கானிஸ்தானைத் தாக்கிய சோவியத் படைகள் வெளியேறிய பிறகும் 1992 ஆம் ஆண்டின் கம்யூனியசச் சார்பு கொண்ட அரசின் பதவி விலகலுக்குப் பிறகும் பதவியேற்ற ஆப்கனிஸ்தானின் முதல் அதிபரான சிப்கதுல்லா முஜாதிதி காலமானார்.
- பிரான்சின் 19 வயது கோரண்டின் மௌதெத் ஆஸ்திரேலியாவின் ஆண்ட்ரு ஹாரிசைத் தோற்கடித்து சென்னை ஓபன் ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் பதக்கத்தை வென்றார்.
- எகிப்திய அதிபர் அப்தல் பதே எல்-சிசி ஆப்பிரிக்க ஒன்றியத்தின் தலைவராக எத்தியோப்பியாவில் நடைபெற்ற கண்டத்திற்கான அமைப்பின் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்தவர்களுக்கான உதவி மையம்

- ஒடிசா மாநில அரசு திருப்பூரில் புலம்பெயர்ந்தவர்களுக்கான உதவி மையத்தை ஆரம்பித்திருக்கின்றது.
- இம்மையம் ஒடிசாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு யாரெல்லாம் புலம்பெயர்ந்து உள்ளார்களோ அவர்களுக்கு ஆதரவையும் உதவியையும் வழங்கும்.
- இம்மையம் முக்கியமாக தீன்தயாள் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனா திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற திறனற்ற தொழிலாளர்களின் குறைகளைத் தீர்க்கும்.
- தேசிய தலைநகரப் பகுதியான டெல்லியிலும், பெங்களூருவிலும் ஒடிசா அரசால் ஏற்படுத்தப்பட்ட இதுபோன்ற மையங்களைத் தவிர சென்னையில் ஏற்படுத்தப்பட்டது அதன் மூன்றாவது மையமாகும்.
- தீன்தயாள் உபாத்யாயா கிராமீன் கௌசல்யா யோஜனாத் திட்டத்தின் கீழ் இம்மாதிரியான மையங்களை ஏற்படுத்த கட்டளையிடப்பட்ட வகையில்

தமிழ்நாட்டில் இம்மாதிரியான மையத்தை ஆரம்பித்ததில் ஒடிசாவே முதல் மாநிலமாகும்.

## ஐக்கியப் பேரரசு – இந்திய சமூகப் புதுமைக்கான சவால்

- மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஐக்கியப் பேரரசு இந்திய சமூகப் புதுமைக்கான சவாலில் முதலாவது மற்றும் மூன்றாவது இடங்களைக் கைப்பற்றியுள்ளனர்.
- இரண்டாவது இடம் ஈரோட்டில் உள்ள கொங்கு பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த அணிக்குச் சென்றது.



- இந்த போட்டி ஐக்கியப் பேரரசு – இந்தியச் சமூகத் தொழில் முனைவோர் கல்விக்கான வலையமைப்பால் (UK India Social Entrepreneurship Education Network - UKISEEN) ஆரம்பிக்கப்பட்டது. இந்த வருடம் அதன் இரண்டாவது பதிப்பு நடத்தப்பட்டது.
- முன்னணியில் இடம்பெற்ற திட்டங்களாவன
    - முதல் இடம் – சூரிய ஒளி மின்சாரத்தைப் பயன்படுத்தி இடிக்கப்பட்ட கட்டிடக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல்.
    - இரண்டாவது இடம் – புதுமையான கார்பன் டை ஆக்சைடு பிரிப்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டுமானம் மற்றும் இடிபாடுகளிலிருந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்தல்.
    - மூன்றாவது இடம் – புறஊதா ஒளிக்கதிர் மற்றும் அல்ட்ராசவுண்ட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மடிவன்தாள் (கிராப்ட்) லிக்னைனின் கிரியாவூக்கி சீரழிவு.

# தேசியச் செய்திகள்

## ஆராய்ச்சிச் சூழலை மேம்படுத்துவதற்கான திட்டங்கள்

- இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சிக் குழுவை மேம்படுத்துவதற்காகவும் இளம் ஆராய்ச்சியாளர்களை ஈர்த்துத் தக்க வைப்பதற்காகவும் அரசு பின்வரும் திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றது.

- பிரதம மந்திரியின் ஆராய்ச்சி உதவித் தொகை
    - திறமையான மாணவர்களை நாட்டிற்குள்ளேயே ஆராய்ச்சியில் ஈடுபடுத்த கவர்ச்சிகரமான உதவித்தொகை அளிக்கப்படுகின்றது.
    - தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு 5 வருடங்கள் உதவித்தொகை வழங்கப்படுகின்றன.
        - ✓ முதல் இரண்டு வருடங்களுக்கு மாதத்திற்கு 70000 ரூபாய்
        - ✓ மூன்றாம் வருடத்தில் மாதத்திற்கு 75000 ரூபாய்
        - ✓ வருடாந்திர ஆராய்ச்சிக்கான உதவித் தொகை மானியமாக இரண்டு லட்ச ரூபாயுடன் 4வது மற்றும் 5வது வருடங்களில் மாதத்திற்கு 80000 ரூபாய்.
- ஆராய்ச்சிப் பூங்காக்களை எற்படுத்துதல்
    - கரக்பூர் ஐஐடி, பம்பாய் ஐஐடி, டெல்லி ஐஐடி, கௌஹாத்தி ஐஐடி, கான்பூர் ஐஐடி, ஹைதராபாத் ஐஐடி, காந்தி நகர் ஐஐடி மற்றும் பெங்களூரு இந்திய அறிவியல் மையம் ஆகிய இடங்களில் ஆராய்ச்சி மையங்களை ஏற்படுத்துதல்.
- புதுமை மற்றும் தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சிக்கான தாக்கம் (Impacting research in Innovation and Technology - IMPRINT)
- உச்சத்தார் அவிஷ்கார் யோஜனா (Uchhatar Avishkar Yojana - UAY)
    - தொழிற்துறைகளின் தேவைகளை நேரடியாக பாதிக்கும் உயர் வகைக்கான புதுமைகளை மேம்படுத்தி அதன் மூலம் இந்திய உற்பத்தித் துறையின் போட்டித் திறனை அதிகரிக்க இது எண்ணுகின்றது.
- வருடாந்திர அடிப்படையில் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
- தங்கள் வளாகத்திற்குள்ளேயேப் புத்தாக்கத்திற்கானச் சுற்றுச்சூழலை மேம்படுத்திட 960 உயர் கல்வி நிலையங்களில் நிறுவனங்களின் புத்தாக்கக் குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன.
- பகுதிநேர M.Tech மற்றும் பிஎச்டி படிப்பிற்கான சிறந்த பட்டதாரி பொறியியலாளர்களை ஈர்த்து, ஊக்கமூட்டி அவர்களுக்கு உதவித்தொகை அளிக்கும் நோக்குடன் என்ஐடியில் பயிற்றுநர் ஆசிரியர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## உலக அரசாங்க மாநாடு 2017

- துபாயில் ஏழாவது வருடாந்திர உலக அரசாங்க மாநாடு நடத்தப்பட்டது.
- இந்த மூன்று நாள் மாநாடு பலதரப்பட்ட வளர்ந்து வரும் துறைகளில் பல்வேறு புதுமைகள் மற்றும் எண்ணங்களை காட்சிப்படுத்திட ஒரு நடைமுறையை வழங்குகின்றது.
- அரசுத் தலைவர்கள், அமைச்சர்கள் மற்றும் வியாபாரத் தலைவர்கள் உட்பட 140 நாடுகளைச் சேர்ந்த 4000 முடிவெடுக்கும் அதிகாரமுடையவர்களால் இந்த மாநாடு நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டில் இந்தியாவின் “போக்குவரத்து குரு செயலிக்கு” விளையாட்டுச்


சேவைப் பரிவில் சிறந்த கைபேசி நிர்வாக விருது வழங்கப்பட்டது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## பெருங்கடல் பற்றிய ஆராய்ச்சிக்காக தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் படகுகள்

- பெருங்கடல் மேற்பரப்பு வாகனமாக தொலைதூரத்திலிருந்து இயக்கப்படும் "ரோபோ போட்" என்பதை பெருங்கடல் தொழில் நுட்பத்திற்கான தேசிய நிறுவனம் உருவாக்கியிருக்கின்றது.
- இது பெருங்கடல் மற்றும் வளிமண்டல உணர்விகளுடன் பொருத்தப்பட்டிருக்கின்றது.
- மிகப்பெரிய பனிப்பாறைகள், குறுகிய நீர்வழித்தடங்கள் மற்றும் முகத்துவாரங்களுக்கு மிக அருகில் இருக்கும் பெருங்கடலின் அளவுருக்களை அளவிட தொலைதூர இடத்திலிருந்து இந்த 10 x 2 அடி அளவுடைய படகை இயக்க முடியும்.



# மாநிலச் செய்திகள்

## அன்னதாதா சுகிபாவா திட்டம்

- ஆந்திரப் பிரதேச அரசு விவசாயிகளுக்கு (அன்னதாதா) பொருளாதார உதவி அளித்திடுவதற்காக அன்னதாதா சுகிபாவா எனும் புதிய திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.
- இத்திட்டம் பிரதான் மந்திரி கிசான் சமான் நிதி எனப்படும் மத்திய அரசின் குறைந்தபட்ச வருமான உதவித் திட்டமான ரூபாய் ஆறாயிரத்துடன் சேர்த்து கூடுதலாக 4000 ரூபாயை மொத்தம் 10000 என்ற அளவில் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருக்கும் சிறுகுறு விவசாயிகளுக்கு அளித்திடும்.

## குரு பத்மசம்பாவா - சிலை

- ஒடிசா முதல்வர், கஜாபதி மாவட்டத்தில் ஜிராங் எனுமிடத்தில் திபெத்திய புத்தமதத்தை நிறுவியவரான குரு பத்மசம்பாவாவின் 19 அடி உயர சிலையைத் திறந்து வைத்தார்.
- இந்த 29 டன் எடை கொண்ட சிலை, கிழக்கு இந்தியாவின் மிகப்பெரிய புத்த மடாலயமான பத்மசம்பாவா மகாவீரா எனுமிடத்திற்கு அருகில் உள்ள ஒரு பெரிய ஏரியான பத்மா சரோவரின் நடுவில் வைக்கப்பட்டிருக்கின்றது.
- வரலாற்றாளர்கள் இரண்டாம் புத்தர் என்றும் அறியப்படும் குரு பத்மசம்பாவா திபெத்திற்குச் செல்வதற்கு முன்னால் ஒடிசாவில் பிறந்து வளர்ந்தார் எனக் கூறுகின்றனர்.




## சேலா கணவாய் சுரங்கப்பாதை

- பிரதமர் அருணாச்சலப் பிரதேசத்தில் சேலா சுரங்கப் பாதைக்கான அடிக்கல்லை

நாட்டினார்.

- இந்த சுரங்கப் பாதை முழுவதாக தயாராகும் போது தவாங் என்னுமிடத்திற்கான பயண தூரம் குறைக்கப்படும்.
- மேலும் பாதுகாப்புப் படைகள் வருடம் முழுவதும் அருணாச்சலப் பிரதேசத்தின் அப்பிராந்தியத்தில் அனைத்துத் தட்பவெப்பநிலைக் காலங்களிலும் போக்குவரத்து வசதிக்காக இதைப் பயன்படுத்துவர்.
- இந்த சேலா சுரங்கப் பாதை அப்பகுதியிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் பொருளாதார நடவடிக்கைகளையும் சுற்றுலாத் துறையையும் ஊக்குவிப்பதற்காக கட்டப்படுகின்றது.
- சேலா கணவாய் சுரங்கப்பாதை எல்லைச் சாலைகள் அமைப்பால் கட்டப்பட இருக்கின்றது.





# முக்கிய தினங்கள்

## தேசியப் பெண்கள் தினம் – பிப்ரவரி 13

- தேசியப் பெண்கள் தினம் முதன்முதலாக 2014 ஆம் ஆண்டு பிப்ரவரி 13 ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது.
- இத்தினம் இந்தியாவின் முதல் பெண் ஆளுநரான சரோஜினி நாயுடுவின் பிறந்த தினத்தன்று அனுசரிக்கப்படுகின்றது.
- சரோஜினி நாயுடு 1879 ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ம் தேதியன்று பிறந்தார். அவர் 1949 ஆம் ஆண்டு மார்ச் 2-ம் தேதி காலமானார்.
- இது அவரது 135-வது பிறந்த நாள் ஆண்டு விழாவாகும்.

- சரோஜினி நாயுடு இந்தியாவின் நைட்டிங்கேல் என்றும் அறியப்படுகின்றார்.
- இந்தியாவில் பெண்களின் வளர்ச்சி மற்றும் ஊக்கத்திற்காக அவர் செய்த சேவைகளுக்கு அங்கீகாரம் அளிப்பதற்காக அவரது பிறந்த தினம் தேசியப் பெண்கள் தினமாக அனுசரித்திடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது.
- அவரது பெயரையும் பிறந்த தேதியையும் தேசிய பெண்கள் தினமாக அனுசரித்திட பாரதிய மகிளா சங்கம் மற்றும் அகில பாரதிய மகிளா சம்மேளனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டது.




- - - - - - - - - - - - - - -